நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நாகப்பட்டினம்

வழக்கு எண்: CC 923/2025

வழக்கு சாட்சி : PW 1 (LW 1)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுரேஷ் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | தங்கவேல் | | : | |
| கிராமம் | : | நாகப்பட்டினம் | வயது | : | 42 / 2026 |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **25.06.2026**

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் வசித்து ஸ்வீட் கடையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த வருடம் ஒரு நாள் இரவில் சுமார் 09.30 மணியளவில் வெளிப்பாளையம் பஸ் ஸ்டாண்ட் அருகே ஒயின் ஷாப்பில் மது அருந்தி கொண்டிருந்தபோது எனது அருகில் இருந்த சில நபர்கள் என்னிடம் பிரச்சனை செய்தார்கள். நான் அவர்களிடம் இருந்து தப்பித்து அமைதியாக சென்றுவிட்டேன். வீட்டு வாசலில் நான் நின்று கொண்டிருந்தபோது மேற்படி நபர்கள் என்னை ஆபாசமான வார்த்தைகளால் திட்டி இரும்பு கம்பியால் அடித்து என்னிடம் பிரச்சனை செய்தார்கள். இது தொடர்பாக போலீஸாரிடம் புகார் அளித்திருந்தோன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சி போலீஸார் விசாரணைக்கு மாறுபட்டு சாட்சியம் அளித்திருப்பதால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்குப் பின்னர் மனு அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 12.08.2025ம் தேதி இரவு சுமார் 09.30 மணியளவில் ஆஜர் எதிரிகள் வெளிப்பாளையம் பேருந்து நிலையம் அருகே வைத்து என்னை ஆபாசமான வார்த்தைகளால் திட்டி கீழே தள்ளி விட்டார்கள் என்றும், பின்னர் வீட்டிற்கு சென்றவுடன் அவர்கள் என்னை தொடர்ந்து வந்து இரும்பு கம்பியால் என்னை அடித்து மண்டையை உடைத்தார்கள் என்றும், எனது முதுகிலும் கீறல் காயம் ஏற்பட்டது என்றும், அக்கம்பக்கத்தினர் வரவும் உன்னை கொலைசெய்யாமல் விடமாட்டேன் என்று மிரட்டி விட்டு ஓடி விட்டார்கள் என்றும், காயம் பட்ட நான் 108 ஆம்புலன்ஸ் மூலம் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்று, அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக நாகப்பட்டினம் ஒரத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டேன் என்றும், சிகிச்சையில் இருந்தபோது ஆஜர் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கும்படி போலீஸாரிடம் புகார் வாக்குமூலம் அளித்தேன் என்றும், போலீஸார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்று நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இல்லை

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்குச் எடுத்து சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.06.25 15:21:55 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
நாகப்பட்டினம்.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நாகப்பட்டினம்

வழக்கு எண்: 923/2025

வழக்கு சாட்சி : PW 2 (LW 10) Additional Witness

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயராமன் | தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர், நகர காவல் நிலையம் |
| தந்தை பெயர் | : | மஞ்சினி | | : | |
| கிராமம் | : | | வயது | : | 52/ 2026 |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **25.06.2026**

எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது நாகப்பட்டினம் நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடன் பணியாற்றிய தலைமை காவலர் சபரிகிரி மற்றும் உதவி ஆய்வாளர் கனகராஜ் ஆகியோர் தற்போது பணிமாறுதல் காரணமாக வேறுவேறு மாவட்டங்களில் வசித்து வருகிறார்கள். அவர்களுடன் பணியாற்றிய வகையில் அவர்களது கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். வழக்கின் தன்மை கருதி காலவிரயத்தை தடுக்கும் பொருட்டு கோப்புகளின் அடிப்படையில் நீதியின் நலன் கருதி சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 13.08.2025 ம் தேதி தலைமை காவலர் சபரிகிரி நிலைய பொறுப்பில் இருந்த போது நாகப்பட்டினம் ஒரத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சுரேஷ் த/பெ. தங்கவேல்

என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலைய குற்ற எண்.369/2025 ச/பி. 296(b), 118(1), 351(3) BNS ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். சுரேஷ் அளித்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.2** ஆகவும், முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் கனகராஜ் அவர்கள் 13.08.2025 ம் தேதி 12.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4,5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. பின்னர் ப.சா.1 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் குற்றசம்பவத்தால் பாதிக்கப்பட்ட அ.சா.1 ற்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் சிவபிரகதீஸ் மற்றும் சண்முகபிரியா ஆகியோரிடம் தனித்தனியாக விசாரணை மேற்கொண்டு வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்றுள்ளார் அந்த விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று **அ.சா.ஆ. 6,7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் சபரிகரி என்பவரிடம் விசாரணை மேற்கொண்டு வாக்குமூலம் பதிவு செய்து அவரது புலன் விசாரணையை முடித்து எதிரிகளுக்கு எதிராக ச/பி. 296(b), 118(1), 351(3) BNS ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**</u>

நான் கோப்புகளின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன தேதியில் சாட்சிகளை சரிவர விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. புகார்தாரும், அவரது உறவினரும் சேர்ந்து தாக்கியதாக வெளிப்பாளையம் காவல் நிலையத்தில் உள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக புகார்தாரர் எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றும் அந்த புகாரின் அடிப்படையில் பொய்யான வழக்கு தாக்கல் செய்யயப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்குச் எடுத்து சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.06.25 15:22:05 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

நாகப்பட்டினம்.